பக்கங்கள் 19+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 16 வெள்ளிக்கிழமை 01.08.2024 | அதிர்வு 01

## ஆசிரியர் துன்புறுத்தல்; மாணவி உயிர்மாய்ப்பு!

கொழும்பு - ஹோமாகம பிரதேசத்தில் பாடசாலை மாணவி ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார் என்று நுகேகொடை பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# செம்மணி மனிதப் புதைகுழி தமிழினப் படுகொலைக்கு ஆதாரபூர்வமான சாட்சி!

### அகழ்வுப் பணிகளில் சர்வதேச நிபுணத்துவக் கண்காணிப்பு மிக அவசியம் என்று தமிழரசின் எம்.பி. சிறீதரன் வலியுறுத்து



(எஸ்.நிதர்ஷன்)

தமிழினப் படுகொலையை ஆதாரபூர்வமாக எண்பிப்பதற்கான சாட்சியமாக வெளிப்பட்டிருக்கும் யாழ். செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகளில் சர்வதேச நிபுணத்துவக் கண்காணிப்பு மிகவும் அவசியமானது என்பதுடன், ஸ்கானிங் இயந்திரம் உள்ளிட்ட நவீன தொழில்நுட்ப உபகரணங்களின் உதவியோடு அந்தப் பகுதியில் முழுமையான அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன்

02





# சந்திரசேன பிணையில் விடுவிப்பு

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திர சேனவைப் பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி இன்று வெள்ளிக் கிழமை காலை உத்தரவிட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் எஸ்.எம் சந்திர சேன இன்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எஸ்.எம் சந்திரசேன, 2015 ஜனாதி பதித் தேர்தலின் போது தனது அன்புக் குரியவர்களுக்கு 25 மில்லியன் ரூபா பெறுமதியான சோளங்களை வழங்கி யமை தொடர்பில் வாக்குமூலம் வழங்கு வதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் கடந்த ஜூன் மாதம் 4 ஆம் திகதி காலை முன்னிலையாகியிருந்த போது இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் தொடர்ந்து விளக்கமறியலில் வைக் கப்பட்டிருந்த நிலையில் தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் 7 பொலிஸ் உத்தியோகத்தர்கள் அதிரடியாகப் பணி இடைநிறுத்தம்

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றும் 7 பொலிஸ் உத்தி யோகத்தர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க அண்மையில் மாலைதீவு சென்று மீண்டும் நாடு திரும்பிய போது, அவருடன் சென்றிருந்த ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் 7 பொலிஸ் உத்தி யோகத்தர்கள் விமான நிலைய டியூட்டி ப்ரீ வணிக நிலையங்களில் சட்ட விரோதமான முறையில் பொருட்களைக் கொள்வனவு செய்ததால் இவ்வாறு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள் ளனர்.

---

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயா னப் பகுதியில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியின் அகழ்வு நடவடிக் கைகளைப் பார்வையிடுவதற்காக நீதி மன்ற அனுமதியைப் பெற்றுக்கொண்ட தன் அடிப்படையில், இன்று அங்கு நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் ஊடகங் களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சிறீதரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித் ததாவது,

“1995 ஆம் ஆண்டிலில் இருந்து 2001 ஆம் ஆண்டு வரையும் முழுக்க முழுக்க இராணுவ முகாமாகவும், இராணுவக் கட்டுப்பாட்டு வலயமாகவும் கையகப்படுத்தப்பட்டிருந்த செம்மணிப் பகுதியில் அடையாளம் காணப்படும் மனித என்புத் தொகுதிகள் சாதாரணமாக புதைக்கப்பட்டவைதான் என்று கூற முற்படுவது மிக அபத்தமானது.

இந்துக்களின் சடங்குமுறையில் உடலங்களைக் கூட்டாக அடக்கம் செய் வதோ, ஆடைகளற்று அடக்கம் செய் வதோ பின்பற்றப்படுவதில்லை. அவ்வாறிருக்க ஓர் இனத்தின் பல தசாப்தகாலப் போராட்டத்துக்கான சாட்சியமாக அணுகத்தக்க முக்கியத்துவம் மிக்க விடயமொன்றை மடைமாற்றும் செயற்பாடுகளில் சிலர் ஈடுபடுகின்றார் கள்.

அத்தகைய அரச ஒத்தோடிகளின் செயற்பாடுகளைக் கடந்து, செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் முழுமையாக நடைபெற்று உண்மைகள் கண்டறியப்படுவதற்காக, சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளின் கவனத்தைக் கோரும் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வோம்.” – என்றார்.

---

## ஆசிரியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவர் ஹோமாகம, கிரிவத்து டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுடைய பாடசாலை மாணவி ஆவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இந்த மாணவி சுகயீனம் காரணமாக நீண்ட நாட்களாகப் பாடசாலைக்குச் செல்லாமல் இருந்துள்ளார்.

பின்னர் இந்த மாணவி மீண்டும் பாட சாலைக்குச் சென்றுள்ள நிலையில், விடுமுறை எடுத்த நாட்களுக்காக வைத்திய அறிக்கை ஒன்றை வழங்குமாறு பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் கூறி யுள்ளார்.

ஆனால், இந்த மாணவி வைத்திய அறிக்கையை வழங்கத் தவறியுள்ளார்.

இதனால் இந்த மாணவிக்குக் கடு மையாக தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த மாணவி பரீட்சைகளி லும் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ள தால், பாடசாலையின் ஆசிரியர் ஒருவரால் துன்புறுத்தப்பட்டுள்ளார்.

இதனால் மனதளவில் பாதிக்கப்பட்ட மாணவி தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்துள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறிருப்பினும் இது தொடர்பில் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று நுகேகொடை பொலிஸ் பிரிவு மேலும் குறிப்பிட்டுள் ளது.


மாலை
முரசு
இரண்டாவது ஆண்டு நிறைவு
01.08.2025
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
Bonding Tamils Globally

# அநுராதபுரத்தில் நீரில் மூழ்கி குடும்பஸ்தர் ஒருவர் மரணம்

அநுராதபுரம், நொச்சியாகம, பஹளஹல்மில்லேவ குளத்தில் நீராடிக்கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் நொச்சியாகம, பஹளஹல்மில்லேவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 40 வயதுடையவர் ஆவார்.

உயிரிழந்தவரின் சடலம் நொச்சியாகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நொச்சியாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# நாவிதன்வெளியில் திண்மக்கழிவு நிலையத்துக்கு சுற்றுமதில் அமைப்பு!

(வி.ரி.சகாதேவராஜா)



மாகாண நன்கொடை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாவிதன்வெளிப் பிரதேச சபையின் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தின் 4 ஆம் கட்ட சுற்றுமதில் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு தவிசாளர் இ.ரூபசாந்தன் தலைமையில் நடைபெற்றது.

தவிசாளர் முதலாவது அடிக்கல்லை நட்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பிரதித் தவிசாளர் கு.புவனரூபன், சபையின் செயலாளர், உள்ளூராட்சி உதவியாளர், தொழிநுட்ப உத்தியோகத்தர், சனசமுக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அடிக்கற்களை நட்டனர்.

நீண்ட காலமாக சுற்றுமதிலின்றிக் காணப்படும் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கிலேயே இந்த வேலைத்திட்டம் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.



# “மாற்றத்துக்கான பாதை நேரான பெற்றோரியம்” என்னும் திட்டம் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில்

யுனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஜெசாக் நிறுவனத்தால் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கிராம சேவையாளர் பிரிவின் கீழ் சிறுவர், பெற்றோரை உள்ளடக்கி “மாற்றத்துக்கான பாதை நேரான பெற்றோரியம்” என்ற தொனிப்பொருளுக்கு அமைவாக நடைமுறைப் படுத்தப்பட்டுவந்த விழிப்புணர்வுத் திட்டத்தின் நிறைவுப் பகுதி பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (31) நடைபெற்றது.

நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி ச.குணஜா, யுனிசெப் நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு அதிகாரி ரி.சர்மிலி, ஜெசாக் நிறுவன நிறைவேற்று அதிகாரி ந.சுகிர்தராஜ், கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர், பிரதேச கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ட்ரம்ப் வழங்கிய சகாயம்

தாம் இந்த ஆண்டு முற்பகுதியில் ஆட்சி அதிகாரத்திற்கு மீண்டும் வந்தமையை அடுத்து, வெளிநாடுகள் தமது நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்கான தீர்வையை கண்மண் தெரியாமல் அதிகரிப்பதான அறிவிப்புகளை அடுத்தடுத்து விடுத்து சர்வதேச அரசியலில் தொடர்ந்து சண்டப்பிரசண்டம் பண்ணிவரும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இப்போது அந்த வரிகளின் நடைமுறையாக்கத்தை வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்குத் தள்ளி வைத்திருக்கின்றார். முன்னதாக, அந்த வரி அதிகரிப்பு இன்று முதல் நடைமுறைக்கு வரும் என அவர் அறிவித்து இருந்தார்.

இலங்கை விடயத்தில் ஏனோ அவர் கடைசி நேரத்தில் பெருமனது பண்ணி, கருணை காட்டி, சற்று சகாயம் அளித்து இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களுக்கான வரியை முதலில் அதிரடியாக 44 வீதம் என்று கடந்த ஏப்ரலில் அறிவித்த அமெரிக்க அதிபர், பின்னர் கடந்த ஜூலை 10 ஆம் திகதி அதனை முப்பது வீதமாகக் குறைத்து அறிவித்தார். நேற்று வரை - கடைசி நேரம் வரை - அதை 30 வீதம் என்று பிரகடனப்படுத்தியிருந்தார். ஆயினும் கடைசி நேரத்தில் நேற்று இரவு அதனை 20 வீதமாக குறைத்து சாகசம் செய்து இருக்கிறார்கள்.

புதிய அறிவிப்பின்படி, வரும் வெள்ளிக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் இந்த வரிவீதத்தின் பிரகாரம் இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களுக்கு இருபது வீதம் மேலதிகமாக வரியாக அமெரிக்காவுக்குச் செலுத்த வேண்டி இருக்கும்.

ஆயினும் இது இலங்கைக்கு ஓரளவு திருப்தியைத் தரும் முடிவாகக் கொள்ளத்தக்கது.

ஏனெனில் தைத்த ஆடைகள் உட்பட இலங்கை ஏற்றுமதி செய்யும் பொருள்கள் பெரும்பாலும் பங்களாதேஷ், இந்தியா போன்ற இந்தப் பிராந்தியத்தின் ஏனைய நாடுகளோடு போட்டியிட்டு மேற்கொள்ளப்படுபவை.

பங்களாதேஷுக்கு 20 வீதமும், பாகிஸ்தானுக்கு 19 வீதமும், இந்தியாவுக்கு 25 வீதமும் அமெரிக்கா வரி விதித்திருக்கின்றமையால் அவற்றோடு போட்டி போட்டு இலங்கை தன்னுடைய ஏற்றுமதியை வழமைபோல முன்னெடுக்கலாம். அதில் பின்னடைவு ஏற்படாது என்று ஏற்றுமதியுடன் தொடர்புடைய வர்த்தக வட்டாரங்கள் திருப்தி தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், இலங்கைக்கான வரித் தொகையை அமெரிக்கா முப்பதிலிருந்து இருபது வீதமாகக் குறைத்தமை மகிழ்ச்சி அளிப்பதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். அவர் தமது எக்ஸ் தளத்தில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கை ஏற்றுமதிகளுக்கான வரியை அமெரிக்கா குறைத்துள்ளமை மகிழ்ச்சி அளிக்கிறது. இது இலங்கையின் ஏற்றுமதித் துறைக்குக் கிடைத்த வெற்றி. இதற்காக உழைத்த அனைவருக்கும் பாராட்டுகள். இந்த வரி குறைப்பு இலங்கை இந்தப் பிராந்தியத்தில் ஏனைய நாடுகளுடன் போட்டியிட்டுத் தன் ஏற்றுமதியை முன்னெடுக்க உதவும்.'' - என்ற கருத்தையே அவரும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.





## பளை கச்சார்வெளி பிள்ளையார் ஆலயத் திருவிழா!

பளை கச்சார்வெளி பிள்ளையார் கோவில் பெருந்திருவிழாவின் கொடியேற்றத் திருவிழா நேற்று (31) இடம்பெற்றது.

திருவிழா தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

# மரண அறிவித்தல்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1950 | 2025 |
| 07 | 07 |
| 03 | 31 |



வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர்.வேலாயுதம் குணபாலன்

(சென் ஜோசப் தொழிநுட்பக் கல்லூரி விரிவுரையாளர்)

**அவர்கள் 31.07.2025 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.**

அன்னார் காலஞ்சென்ற மூத்ததம்பி வேலாயுதம், வேலாயுதம் சுபத்திரை தம்பதிகளின் பாசமிகு மகனும், சத்தியாவின் அன்புக் கணவரும், கமலேஸ்வரி, உதயஜேஸ்வரியின் அன்புச் சகோதரனும், நிரோஷன், சுபாஷினி (லண்டன்), சுதாஷினி (அமெரிகா), நிஷந்தன் (கனடா) விக்னேஸ்வரன் (பெறாமகன்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

நிரஞ்சினி, துளசிசெல்வன் (லண்டன்), சிறிஸ்கந்தராஜா (அமெரிகா), சாம்பவி (கனடா) ஆகியோரின் மாமனாரும் நிகன், நிஷானி, ஐஷ்சானி, ஆவன்யா, சாயிஷ்சன், சாகித் ஆகியோரின் பாட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 55/25, 3வது ஒழுங்கை, கந்தசாமி கோயில் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 04.08.2025 திங்கள் கிழமை காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்.
077 4342728 / 077 6179433



# திருமலையில் நூல் அறிமுக நிகழ்வு!

எழுநா மற்றும் திருகோணமலை தளம் அமைப்பின் ஏற்பாட்டில் கலாநிதி என்.கே.எஸ். திருச்செல்வத்தின் 'இலங்கையின் பிராமி மற்றும் சிங்களக் கல்வெட்டுகளில் தமிழர்' என்ற நூலின் அறிமுக நிகழ்வு தளம் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வின் தலைமை உரையைத் தளம் அமைப்பின் இயக்குநர் வைத்தியர் ஹயக்கிரிவன் வழங்க, நூல் அறிமுக உரையைத் தென்கயிலை ஆதீனம் சுவாமி அகத்திய அடிகளார் நிகழ்த்தியிருந்தார்.

குறித்த நூலுக்கான மதிப்பீட்டுரையை வைத்தியர் அ. ஸதீஸ்குமார் ஆற்றியிருந்தார். தொடர்ந்து, ஏற்புரையை நூலாசிரியர் கலாநிதி என். கே.எஸ். திருச்செல்வம் வழங்கினார்.

தமிழர் தொன்மையின் மீது புதிய பார்வையை வழங்கும் இவ்வாறான நூல்கள் காலத்தின் கட்டாயமாக இருப்பதால், மேலும் இவை போன்ற நூல்கள் தொடர்ந்தும் வெளியிடப்பட வேண்டும் என்று நிகழ்வில் கருத்துரைக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் அறிவார்ந்த நபர்கள், கல்வி ஆர்வலர்கள், துறைசார் ஆர்வலர்கள், நண்பர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





# சமூக சேவைகள் விருதை பெற்றுள்ளார் சுகாதார வைத்திய அதிகாரி இஸ்ஸதீன்!







(அபு அலா )

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸதீனின் சமூக சேவைகளைப் பாராட்டி பதக்கம், சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசில்களை தமிழ் லெட்டர் குழுவினர் வழங்கிக் கௌரவித்தனர்.

சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸதீன் தனது வைத்திய சேவையையும் தாண்டி, மனித நேயத்துடன் பல்வேறுபட்ட சமூகப் பணிகளைத் தனது சொந்த நிதியின் மூலம் பல வருடங்களாக செய்து வருகின்றார்.

இவரின் இந்தச் சேவைகளைப் பாராட்டி தமிழ் லெட்டர் குழுவினர் அவரின் சொந்த ஊரான பொத்துவில் பிரதேசத்துக்குச் சென்று சமூக சேவைகள் மற்றும் பொறுப்புக் கூறலுக்குமான இவ்விருதை வழங்கி கௌரவித்தனர்.

இந்த விருது தமிழ் லெட்டர் குழுவின் பணிப்பாளர் ஏ.எல்.றமீஸ் தலைமையில் வழங்கி கௌரவிக்கப்பட்டது.



# வேத எதிரொலிகளின் ஆல்பம் வெளியீடு!

ஸ்ரீ வத்சலா ராமநாதன், திவாஹர் செல்வரத்னம் எழுதிய வேத எதிரொலிகளின் ஆல்பம் வெளியீட்டு வைபவம் கொழும்பு 7 சுவாமி விவேகானந்தர் கலாசார நிலையத்தின் நடைபெற்றது.

பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்திய துணை உயர் ஸ்தானிகர் டாக்டர் ஏ.எஸ். சத்யஞ்சல் பாண்டேயும் சிறப்பு விருந்தினராகப் பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் மற்றும் நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி அங்குரன் தத்தா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் திவாகர் செல்வரத்தினம், ஸ்ரீ வத்சலா ராமநாதன் இருவரும் அல்பத்தை வெளியிட்டு வைத்தனர்.







# “வாரத்தில் ஒரு நாள்” வேலைத்திட்டம் ஆரம்பம்!




(அபு அலா )

அட்டாளைச்சேனை பிரதேச சபையால் “வாரத்தில் ஒரு நாள்” வேலைத் திட்டம் ஒன்று இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தை வாராந்தம் செயற்படுத்தவுள்ளதாகப் பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எஸ். எம்.உவைஸ் தெரிவித்தார்.

“வாரத்தில் ஒரு நாள்” வேலைத் திட்டத்தின் முதலாவது ஆரம்பப் பணி அட்டாளைச்சேனை – 16 ஆம் பிரிவில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் அட்டாளைச்சேனை பிரசேத்திலுள்ள அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் வாரத்தில் ஒருநாள் செயற்படுத்தப்படும் என்றும் அதே வேளை, அப்பிரிவிலுள்ள பொது மக்களின் முறைப்பாடுகளுக்கு பதிலளித்தல், பொருத்தமான இடங்களுக்கு மின் விளக்குகள் பொருத்துதல், செயற்படாமல் இருக்கின்ற மின் விளக்குகளை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், வடிகான்களை துப்பரவு செய்தல், திண்மக் கழிவுகளை முறையாக அகற்றுதல் போன்ற பலவேறுபட்ட செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறு முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தில் பிரதேச சபை உறுப்பினர்கள், கல்வியியலாளர்கள், உலமாக்கள், பிரதேச விளையாட்டுக் கழகங்கள், சமூக சேவை அமைப்புக்கள், சமூக ஆர்வலர்கள், இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் பங்கேற்பர் என்றும் அவர் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எஸ்.எம்.உவைஸின் எண்ணக்கருவில் உருவான “வாரத்தில் ஒரு நாள்” என்ற இந்த வேலைத்திட்டம் அனைத்து பிரதேச சபை உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






# கல்முனை மாநகர சபையில் சேவை நலன் பாராட்டு விழா!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வருடாந்த சேவை நலன் பாராட்டு விழா மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதன்போது கல்முனை மாநகர சபையில் மிகவும் சிறப்பாகக் கடமையாற்றி, இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களும் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களுமாக 27 பேர் நினைவு விருது வழங்கி, பொன்




னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் கணக்காளர் ஏ.எஸ். மனாஸிர் அஹ்சன், ஆயுள்வேத வைத்தியர் ஜுமானா ஹஸீன், வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.ஏ. நிசார், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வரவர்மன், நிதி உதவியாளர் யூ.எம். இஸ்ஹாக், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். டிலிட் நௌசாட், வருமானப் பரிசோதகர் சமீம் அப்துல் ஜப்பார் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

இதன்போது உத்தியோகத்தர்களின் கலை, கலாசார நிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்பட்டன.

அத்துடன் கல்முனை மாநகர சபையில் கடமையாற்றி, மரணித்த உத்தியோகத்தர்களுக்கான பிரார்த்தனையும் இடம்பெற்றது.

மாநகர சபையின் வருமானப் பரிசோதகர் சமீம் அப்துல் ஜப்பார் விழா நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார்.













# கொத்தணி அடிப்படையிலான இரத்ததானம் பிரதேச செயலக ரீதியாக ஆரம்பித்து வைப்பு

யாழ். மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலக ரீதியாக கொத்தணி அடிப்படையிலான இரத்த தான முகாம் அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா வைத்தி யசாலையின் இரத்த வங்கிப் பிரிவுடன் இணைந்து ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாக கொத்தணி அடிப்படையில் இரத்ததான முகாம் நடத்த முடிவு செய் யப்பட்டது.

இந்த இரத்ததான ஆரம்ப நிகழ்வு – கோப்பாய் பிரதேச செயலக பிரிவி



லுள்ள அச்சுவேலி கொத்தணி நிகழ்வு அச்சுவேலி மத்திய கல்லூரியில் உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ். அபர்ணா தலைமையில் நடைபெற் றது.

ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தி னராக யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் 47 பேர் இரத்ததானம் வழங் கினர்.

ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாக கொத்தணி அடிப்படையில் இரத்த தானம் வழங்கும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ள நிலையில், அடுத்த இரத்தான நிகழ்வு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி நெடுந்தீவு பிரதேசத்தில் நடைபெறவுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது.



# நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் சாரதி பயிற்சி செயன்முறை பரீட்சை

அரச அதிபரின் ஆலோச னைக்கு அமைவாகவ நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் முதன் முறையாக சாரதி பயிற்சி செயன் முறை பரீட்சை நடத்தப்பட்டது.

யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பங்குபற்றுதலுடன் நடமாடும் சேவையாக முன்னெடுக்கப்பட்ட இந்தப் பரீட்சையில் 73 பேர் சித்தியடைந்தனர்.





# இலங்கை இராணுவத் தளபதி கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு!

(அபு அலா )

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு விடயங்களில் இராணுவத்தின் ஈடுபாடு மற்றும் பொதுமக்களுடனான ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடப்பட்டது.

கிழக்கு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜனக பல்லேகும்புர மற்றும் 22 ஆவது காலாட்படை பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் லலித் பெரேரா ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# தேசிய விளையாட்டு வாரத்தை முன்னிட்டு சம்மாந்துறையில் கிரிக்கெட் சுற்றுப் போட்டி!

## பிரதேச சபை சம்பியனாகத் தெரிவு

(வி.ரி.சகாதேவராஜா)

"ஒரு ஆற்றல் மிக்க குடிமகன் ஒரு வெற்றிகரமான நாடு" என்ற அரசின் விளையாட்டு கொள்கையின் கீழ், இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சு விளையாட்டு வார நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

ஜுலை 31 ஆம் திகதி தேசிய விளை யாட்டு தினத்துடன் இணைந்ததாக ஜுலை 26 முதல் ஜுலை 31 வரை நாட ளாவியரீதியில் இத்திட்டத்தை செயல் படுத்தியிருந்தது.

அதனை முன்னிட்டு சம்மாந்துறை பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய் யப்பட்ட சிநேகபூர்வ மென்பந்து கிரிக் கெட் சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் (30)விளையாட்டு உத்தியோகத்தர் எல். சுலக்சனின் ஒருங்கிணைப்பில், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல் முஹம்மது ஹனிபா தலைமையில் சம்மாந்துறை மத்திய கல்லூரி மைதா னத்தில் இடம்பெற்றது.



இந்தச் சுற்றுப் போட்டிக்குச் சம்மாந் துறை பிரதேச சபைத் தவிசாளர் ஐ.எல். எம். மாஹீர், உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம். அஸ்லம், சம்மாந்துறை முஸ் லிம் மத்திய கல்லூரியின் அதிபர் எம்.டி.எம்.ஜனூபர், நிர்வாக உத்தி யோகத்தர் ஜே.எம். ஜெமில், சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம். பி.எம்.ஹுசைன் உட்பட பிரதி அதிபர் கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் சம்மாந்துறை பிர தேச சபை அணியை எதிர்த்து சம்மாந் துறை வைத்தியசாலை அணியினர் மோதினர்.

இதில் பிரதேச சபை அணியினர் வெற்றியடைந்தனர். சிறப்பாட்டக்காரராக எம்.ஆசீக் தெரிவு செய்யப்பட்டார்.



# திருக்கோவிலில் காணிக்கச்சேரி!





**(வி.ரி. சகாதேவராஜா)**

திருக்கோவில் பிரதேசத்தில் காணி உத்தரவு பத்திர மற்றவர்களுக்கு உரிமம் வழங்குவதை பரிசீலிக்கும் காணிக் கச்சேரி இரு தினங்கள் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் பாலக்கரச்சி, சாகாமம் , பழவர்க்கம், சேனைக்காடு, தாண்டியடி, கஞ்சி குடியாறு, சாகாமம், காஞ்சிரங்குடா ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுக்கான காணி கச்சேரியே நடைபெற்றது.









# டயகம - தலவாக்கலை பிரதேச பஸ் சேவை அனுமதி வழங்கல்!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா மாவட்டத்தில் அதிக பின்தங்கிய பிரதேசமான டயகம மற்றும் அக்கரப்பத்தனை பிரதேசத்தில் இருந்து பஸ் சேவை நடத்துவதற்கான அனுமதி கிடைத்துள்ளது.

இதனை மத்திய மாகாண தனியார் போக்குவரத்து சபை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த பஸ் சேவையானது டயகம பஸ் நிலையத்தில் இருந்து காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி காலை 7.45 மணிக்கு தலவாக்கலை பஸ் நிலையத்தை வந்தடையும். பிற்பகல் 2.10 மணிக்கு தலவாக்கலை பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்டு டயகம நோக்கி செல்லும்.

பஸ்ஸில் மாணவர்கள், ஆசிரியர்கள் மாத்திரமே பயணிக்க முடியும். பஸ் கட்டணம் அரைவாசி தொகையை மாத்திரமே பயணிகள் செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பஸ் சேவையால் டயகம, மன்றாசி, அக்கரப்பத்தனை, ஹோல்புறூக், திஸ்பனை, நாகசேனை, லிந்துலை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த பாடசாலை மாணவர்கள் நன்மையடைவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

டயகம நகரத்தில் இருந்து தலவாக்கலை வரையான 23 கிலோ மீற்றர் தூரம் இந்த பஸ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இதன் ஊடாக 23 பாடசாலை மாணவர்கள் இந்தச் சேவையை பயன்படுத்த வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வில் அக்கரப்பத்தனை பிரதேச சபைத் தலைவர், உபதலைவர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், நகர வர்த்தகர்கள் சமயத் தலைவர் உள்ளிட்ட பலரும் கலந்துக் கொண்டனர்.

இந்தச் சேவையை வரவேற்கும் வகையில் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்தியமும் பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன.

# கேப்பாபிலவில் மதிப்பளிப்பு நிகழ்வு!

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு - கேப்பாபிலவு கிராமத்தில் கற்றல் செயற்பாடுகளிலும், இணை பாடவிதான செயற்பாடுகளிலும் சாதித்த மாணவ, மாணவிகள், வழிப்படுத்திய ஆசிரியர்கள் மற்றும் கேப்பாபிலவு கிராமத்தில் சிறந்த முறையில் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகிய தரப்பினரை மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கேப்பாபிலவு கிராம பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றார்.

மரபுரீதியாக விருந்தினர் வரவேற்புடன் ஆரம்பித்த இந்நிகழ்வில், தொடர்ந்து மங்கலவிளக்கேற்றல் இடம்பெற்றது. அதனையடுத்து கேப்பாபிலவு கிராமத்தில் கற்றல் செயற்பாடுகளிலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் சாதித்த மாணவ, மாணவியர், வழிப்படுத்திய ஆசிரியர்கள், கேப்பாபிலவு கிராமத்தில் சிறந்த முறையில் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பரிசில்கள், நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டனர்.









# உலக வங்கியின் பிரதிநிதிகளுடன் கிழக்கு அபிவிருத்தி கலந்துரையாடல்

(ஹஸ்பர் ஏ.எச்.)

இலங்கை மற்றும் மாலைத்தீவின் உலக வங்கி வதிவிடப் பிரதிநிதி ஜெவோர்க் சார்க்ஸ்யன் மற்றும் உலக வங்கித் தூதுக் குழுவினர் தலைமையில், நேற்று முன்தினம் (30) மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதில் தொழிற்துறை அமைச்சர் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருமான சுனில் ஹந்துன்நெத்தி, கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர, கிராமிய அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, திருகோணமலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரச அதிபர்கள், கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலின் முக்கிய அம்சங்கள் கலந்துரையாடப்பட்டன. இலங்கையின் எதிர்கால அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைவதற்காக உலக வங்கியின் ஆதரவை எவ்வாறு பெறலாம் என்பது குறித்த மிக விரிவான கலந்துரையாடல் நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தின் சுற்றுலா, விவசாயம்,மீன்பிடி, உட்கட்டமைப்புகள் என்ற துறைகள் குறுகிய காலத்தில் பலனளிக்கக் கூடியவை என்று அடையாளம் காணப்பட்டு, அவை மேம்படுத்தப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

புதிய முதலீடுகளை நாட்டுக்குள் இழுக்கும் வகையில் சட்டரீதியான வடுவமைப்பு ஒன்றை உருவாக்கும் அரச நடவடிக்கைகள் மற்றும் அதனை ஆதரிக்கும் கொள்கை வழிகாட்டுதல்கள் பற்றியும் உலக வங்கியினர் தெரிவித்தனர்.

உலக வங்கியின் கடனுதவியின் ஆரம்ப கட்ட திட்டங்கள் குறித்தும் பேசப்பட்டது .

இந்தச் சந்திப்பின் மூலம் கிழக்கு மாகாண அபிவிருத்தி, பொது பங்குதாரர்கள் ஒத்துழைப்பு, மற்றும் நடவடிக்கைக் கூட்டு திட்டங்கள் குறித்து தெளிவான தீர்வுகள் பெறப்பட்டுள்ளன.









# தற்போது நடக்கும் விபத்துக்கள் மனதுக்கு நெருடலாக உள்ளன

## இதை அறியாமை என்று சொல்வதா அல்லது கவனக்குறைவு என்று சொல்வதா என ஆளுநர் விசனம்





இப்போது நடைபெறும் விபத்துக்களைப் பார்க்கும்போது மனதுக்கு நெருடலாக இருக்கிறது. பல்வேறு எதிர்பார்ப்புக்களுடன் பயணிக்கும் ஏனையோரின் உயிரிலும் கவனமில்லை. தமது உயிரிலும் கவனமில்லை. இதை அறியாமை என்று சொல்வதா அல்லது கவனக்குறைவு என்று சொல்வதா எனத் தெரியவில்லை.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கவலை தெரிவித்தார்.

வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் ஒழுங்கமைப்பில் வீதிப் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு யாழ்ப்பாணப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை அதிகார சபையின் தலைவர் க.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்ட ஆளுநர் தனது உரையில், போர்க் காலத்தில் ஏற்பட்ட உயிரிழப்புக்களையும், அங்கவீனங்களையும் விட இப்போது வீதி விபத்துக்களால் அதிகளவு இழப்புக்களைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். வீதி விபத்துக்கள் தொடர்பான செய்திகள் இல்லாத நாள் ஒன்று இல்லை என்ற நிலைமையே இப்போது இருக்கின்றது. குன்றும் குழியுமாக எமது வீதிகள் இருந்தபோது கூட இவ்வாறான விபத்துக்கள் நடக்கவில்லை. இப்போது 'காப்பெற்' வீதியாக எல்லாம் மாறியுள்ள நிலையில் விபத்துக்கள் சடுதியாக அதிகரித்துள்ளன.

மனதைப் பாதிக்கின்ற – நெஞ்சை உலுக்குகின்ற எத்தனையோ விபத்துக்கள் நடக்கின்றன. பல்வேறு எதிர்பார்ப்புக்களுடன் செல்பவர்கள் வீதி விபத்துக்களில் உயிரிழப்பதால் ஏற்படும் நிலைமையை சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதைச் சிந்தித்தால் இந்த விபத்துக்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் குறையும்.

நானே வீதியில் பயணிக்கும்போது பல வாகனச் சாரதிகளின் பொறுப்பற்ற தனத்தைக் கண்டிருக்கின்றேன். எந்தவொரு சமிக்கையும் இன்றித் திடீரென வாகனத்தை குறுக்கே திருப்புவார்கள். சில தனியார் பஸ் உரிமையாளர்களின் முறையற்ற சாரத்தியம் தொடர்பில் வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு நானே முறைப்பாடு அளித்து அவர்கள் ஊடாகச் சட்ட நடவடிக்கை எடுக்கச் செய்திருக்கின்றேன்.

வீதி விபத்துக்களைத் தணிப்பது என்பது, இன்றைய இந்த விழிப்புணர்வு செயலமர்வில் பங்கேற்கும் உங்கள் ஒவ்வொருவரது நடத்தையில்தான் தங்கியிருக்கின்றது.– என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன், யாழ்ப்பாண பிரதேச செயலர் சா.சுதர்சன், மருத்துவக் கலாநிதி எஸ்.ரி.எஸ்.சந்திரகுமார் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சிறுவர் சத்திரசிகிச்சை நிபுணர் பா.சயந்தன், சட்டமருத்துவ அதிகாரி உ.மயூரதன், பிரதம வாகனப் பரிசோதகர் ஜெயசேகர, யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயமன்னா ஆகியோர் விழிப்புணர்வு செயற்பாட்டை முன்னெடுத்தனர்.

### கச்சா எண்ணெய் குறித்து ட்ரம்ப் விமர்சனம்:

# ஐக்கிய அரபு அமீரக ஜனாதிபதியுடன் ஆலோசனை நடத்தினார் பிரதமர் மோடி

இந்திய இறக்குமதி பொருள்களுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படும் என்று அறிவித்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், பாகிஸ்தானுடன் இணைந்து தெற்காசியாவிலேயே மிக பெரிய கச்சா எண்ணெய் கிடங்கு அமைக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

இந்த சூழலில், ஐக்கிய அரபு அமீரக ஜனாதிபதியுடன் பிரதமர் மோடி முக்கிய ஆலோசனை நடத்தியுள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் ஜனாதிபதி முகமது பின் ஜாயத் அல் நயானை பிரதமர் மோடி, தொலைபேசியில் தொடர்பு கொண்டு முக்கிய ஆலோசனை நடத்தியுள்ளார்.

இரு நாட்டு மக்களின் பொதுவான நலனுக்காக இரு தரப்பு ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்துவது குறித்து அவர்கள் ஆலோசனை நடத்தியுள்ளார். இரு நாடுகள் இடையே பல்வேறு துறைகளில் உள்ள பரஸ்பர ஒத்துழைப்பின் முன்னேற்றங்கள் குறித்தும் விவாதித்துள்ளனர்.

இந்தியாவில் நீண்டகாலம் தொடர்ந்து பிரதமராக பதவி வகித்த 2 ஆவது நபர் என்ற சாதனையை பிரதமர் மோடி படைத்துள்ளார். அவரது சேவை தொடர வேண்டும் என்றும் அல் நயான் வாழ்த்தினார் என இந்திய மத்திய அரசின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்திய பொருள்களுக்கு ட்ரம்ப் 25 சதவீத வரி விதித்த நிலையில், கச்சா எண்ணெய் மற்றும் வர்த்தக வரி குறித்து ஐக்கிய அரபு அமீரக ஜனாதிபதியுடன்,



பிரதமர் மோடி பேசி இருக்கலாம். அமெரிக்காவின் வரி விதிப்புக்கு பதில் நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு சில முக்கிய வியூகங்களை வகுக்கும் வகையிலும் பிரதமர் மோடி பேசியிருக்கலாம் என்று டில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, அமெரிக்காவின் வரி விதிப்பு அறிவிப்பு தொடர்பாக மக்களவையில் எதிர்க்கட்சியினர் நேற்று கேள்வி எழுப்பினர். இதற்கு பதில் அளித்து மத்திய வர்த்தகம், தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் உரையாற்றுகையில்,

“உலகின் மிக பெரிய பொருளாதார நாடுகள் பட்டியலில் 11 ஆவது இடத்தில் இருந்த இந்தியா தற்போது 5ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ளது. விவசாயிகள், குறு, சிறு, நடுத்தர தொழில்கள், கார்ப்பரேட் நிறுவனங்களின் கடின உழைப்பு மற்றும் மத்திய அரசின் பொருளாதார சீர்திருத்தங்களால் இந்த சாதனை சாத்தியமானது.

உலகின் நம்பிக்கை நட்சத்திரமாக இந்தியா திகழ்வதாக சர்வதேச நிதி அமைப்புகள், சர்வதேச பொருளாதார நிபுணர்கள் கணித்துள்ளனர். பொருளாதார ரீதியாக நாட்டின் நலன்களை பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

இந்தியா - அமெரிக்கா இடையே பலசுற்றுபேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன. 10-15 சதவீதம் வரி விதிப்பது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.” என்று தெரிவித்தார்.

வரி விகிதம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்காவின் உயர்நிலை குழு ஒகஸ்ட் 25 ஆம் திகதி டில்லி வருகிறது. அப்போது கருத்து வேறுபாடுகள் களையப்படும். அதன்பிறகு, இந்திய உயர்நிலை குழு வொஷிங்டன் செல்லும்.

இந்திய தரப்பில் மூத்த பொருளாதார ஆலோசகர் ராஜேஷ் அகர்வாலும், அமெரிக்க தரப்பில் பிரெண்டனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். ஒக்டோபர் அல்லது நவம்பரில் அமெரிக்காவுடன் முதல்கட்ட வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

கடந்த ஜூலையில் தென்கொரிய பொருள்களுக்கு 25 சதவீத வரியை அமெரிக்கா விதித்தது. இருதரப்பு பேச்சுவார்த்தைக்கு பிறகு இந்த வரியை 15 சதவீதமாக அமெரிக்கா குறைத்துள்ளது. இதேபோல, இந்திய பொருள்கள் மீதான வரியையும் அமெரிக்க அரசு நிச்சயமாக குறைக்கும் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### தமிழக மீனவர்கள் விவகாரம்:

# மத்திய அரசிடம் உரையாடி தீர்வுகாண முயற்சிப்பேன்

## பழனிசாமி உறுதி

தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் விவகாரம் தொடர்பாக மத்திய அரசிடம் பேசி, உரிய தீர்வுகாண முயற்சிப்பேன் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

‘மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்’ என்ற பிரச்சாரத்தை மேற்கொண்டு வரும் பழனிசாமி, இராமநாதபுரத்தில் மீனவர்கள், விவசாயிகள், நெசவாளர்களுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் நேற்று உரையாற்றுகையில்,

“இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதையும், இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்கள் மற்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ள படகுகளை மீட்கவும் மத்திய அரசிடமும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடமும் பேசி, உரிய தீர்வுகாண முயற்சிப்பேன்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் இரு




முறை பயிர் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு 540 கோடி ரூபா காப்பீட்டுத் தொகை பெற்றுத் தரப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியில் 24 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டது.

ஆனால், தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் இந்த திட்டத்தை கிடப்பில் போட்டுவிட்டது. தற்போது மேட்டூர் அணை நிரம்பி 1.25 லட்சம் கனஅடி நீர் கடலில் கலந்து வீணாகிறது. காவிரி-குண்டாறு திட்டம் இருந்திருந்தால், கடலில் உபரியாக கலக்கும் தண்ணீரால் இராமநாதபுரம் மாவட்ட கண்மாய்கள் நிரம்பி இருக்கும். மீண்டும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் காவிரி-குண்டாறு திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும்.

அதேபோல, அ.தி.மு.க. ஆட்சியில் நெசவாளர்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டன. தி.மு.க. ஆட்சியில் அவர்களுக்கு எந்த சலுகையும் கிடைக்கவில்லை. அ.தி.மு.க. ஆட்சியில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் லாபத்தில் இயங்கின. தி.மு.க. ஆட்சியில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூடும் நிலையில் உள்ளன.

நாட்டுப்படகு மீனவர்கள் தங்களது பிரச்சினைகளைத் தெரிவித்துள்ளனர். அ.தி.மு.க. ஆட்சியில் அவற்றுக்குத் தீர்வு காணப்படும். 16 ஆண்டுகள் மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் இருந்த தி.மு.க, கச்சதீவை மீட்க அழுத்தம் கொடுக்கவில்லை. கச்சதீவை மீட்க அ.தி.மு.க. சார்பில் மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்துவோம்.” என்று தெரிவித்தார்.

# உதவிகளுக்கு அனுமதித்தால் மாத்திரமே போர் நிறுத்த பேச்சு; ஹமாஸ் அறிவிப்பு



பாலஸ்தீனப் பகுதிக்குள் போதுமான உதவி அனுமதிக்கப்பட்டால் மாத்திரமே, காசா போர் நிறுத்தம் குறித்த பேச்சு வார்த்தை மேசைக்குத் திரும்பத் தயாராக இருப்பதாக ஹமாஸ் அறிவித்துள்ளது.

காசாவில் பொதுமக்கள் பட்டினியால் இறக்கின்றனர் மற்றும் உதவி விநியோக தளங்களில் இஸ்ரேலிய துப்பாக்கிச் சூட்டை அவர்கள் எதிர்கொள்கின்றனர் என்றும் ஹமாஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வாரம் கட்டாரில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலிருந்து அமெரிக்காவும் இஸ்ரேலும் விலகிக்கொண்டன.

நம்பிக்கையின்மையுடன் ஹமாஸ் பேச்சுவார்த்தை நடத்தியதாகக் குற்றம் சுமத்தியே அந்த இரண்டு நாடுகளும் பேச்சுவார்த்தையில் இருந்து விலகிக் கொண்டன.

இந்தநிலையில், மத்திய கிழக்குக்கான, டொனால்ட் ட்ரம்பின் சிறப்புத் தூதுவர் ஸ்டீவ் விட்காஃப் நேற்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை சந்தித்தார்.

இதனையடுத்து விட்காஃப் மற்றும் இஸ்ரேலுக்கான அமெரிக்கத் தூதுவர் மைக் ஹக்காபி ஆகியோர் இன்று காசாவுக்குச் செல்வார்கள் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆதரவு பெற்ற காசா மனிதாபிமான அறக்கட்டளையால் நடத்தப்படும் உதவி விநியோக தளங்களை அவர்கள் ஆய்வு செய்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீனத் தலைநகர் பீஜிங்கில் பெரும் வெள்ள அனர்த்தம்



சீன தலைநகர் பீஜிங்கில் கடந்த சனிக்கிழமை முதல் கனமழை பெய்ததால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் நகரின் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர். 136 கிராமங்களில் மின்சார விநியோகம் தடைபட்டது. 30 இற்கும் மேற்பட்ட வீதிகள் சேதம் அடைந்தன.

இதையடுத்து கடந்த 4 நாள்களாக மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இந்த மழை வெள்ளத்தில் சிக்கி 44 பேர் உயிரிழந்தனர். 9 பேரை காணவில்லை. பீஜிங்கின் வடக்கு மலைப்புர மாவட்டங்களான மியூன், யான் கிங் ஆகியவற்றில் இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. முன்னதாக கடந்த திங்கள் கிழமை சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் உயிர் மற்றும் உடைமைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பீஜிங் உள்ளிட்ட 9 பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள சீன நிதி மற்றும் பேரிடர் மேலாண்மை அமைச்சகம் கடந்த செவ்வாய்க்கிழமை நிதி ஒதுக்கீடு செய்தது. இதுதவிர சீனாவின் தேசிய வளர்ச்சி மற்றும் புனரமைப்பு ஆணையமும் நிதி ஒதுக்கியுள்ளது.

கனடா முரசு


பக்கங்கள் - 03

வெள்ளிக்கிழமை 01/08/2025


## டொரொன்டோவில் வைரஸ் தொற்று



C3 ▶



# கனடாவுடனான வர்த்தக ஒப்பந்தம் மிகவும் கடினமான விடயமாகும்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிப்பு

கனடாவுடன் வர்த்தக ஒப்பந்தத்தை முன்னெடுப்பது மிகவும் கடினமானது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனத்தை அங்கீகரிப்பதாக கனடா பிரதமர் அறிவித்ததையடுத்து ட்ரம்ப் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்நிலையில், நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கனடாவுக்கு விதிக்கப்படும் வரி வீதத்தை 25 சதவீதத்திலிருந்து 35 சதவீதமாக அமெரிக்கா உயர்த்தியுள்ளது.

இந்த புதிய வரி விதிப்புகள் வெள்ளை மாளிகையால் அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலும், பல நாடுகளுக்கும் புதிய வரி வீதங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவை ஏழு நாள்களுக்குள் நடைமுறைக்கு வரவிருக்கின்றன.

இவ்வாறான நிலையில் கனடாவின் ஏற்றுமதிகள் மீதான வரி 25 சதவீதம் இலிருந்து 35 சதவீதம் ஆக உயர்த்தப்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் சட்டவிரோத போதைப் பொருள் நெருக்கடியில் கனடாவின் செயலற்ற தன்மை மற்றும் அமெரிக்காவுக்கு எதிரான பழிவாங்கும் கொள்கை காரணமாகவே

இந்த வரி உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.



## கனடாவுக்கான இறக்குமதி வரியை 35 வீதமாக உயர்த்தினார் ட்ரம்ப்

கனடாவுக்கான இறக்குமதி வரியை 25 வீதத்திலிருந்து 35 வீதமாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உயர்த்தியுள்ளார்.

சட்டவிரோத போதைப் பொருள் நெருக்கடியில் கனடாவின் இயலாமை போக்கு மற்றும் அமெரிக்காவுக்கு எதிரான பழிவாங்கும் கொள்கை காரணமாகவே கனடாவுக்கு இந்த வரி உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இதேவேளை, மெக்சிக்கோவுக்கு மாத்திரம் அதிக வரி விதிப்பை ட்ரம்ப் 90 நாள்களுக்கு இடைநிறுத்தியுள்ளார்.

ஏலவே இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன இந்த வரி விதிப்பு தொடர்பில் அமெரிக்காவுடன் உடன்படிக்கைகளை செய்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கா மீதான வரியை அதிகரிக்க வேண்டும்

### ஒன்றாரியோ மாகாண முதல்வர் தெரிவிப்பு




அமெரிக்கா மீது கூடுதல் வரியை அமெரிக்கா விதிக்க வேண்டுமென ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வரி விதிப்பு அறிவிப்பினை கருத்திற்கொண்டு தளரக்கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடா சரியான ஒப்பந்தத்துக்குத் தவிர வேறு எதற்கும் சமரசம் செய்யக் கூடாது என தெரிவித்துள்ளார்.

C2 ▶



# காற்றின் தர அறிக்கை தொடர்பில்
# டொராண்டோவில் எச்சரிக்கை

டொராண்டோ மற்றும் தெற்கு ஒன்ராறியோவில் காற்றின் தர அறிக்கை தொடர்பில் எச்சரிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

காட்டுத்தீ புகை காரணமாக இந்த விசேட எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புகை காரணமாக காற்றின் தரம் மோசமடைவதற்கு அல்லது மோசமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் வீதிகள் தென்படுவது குறைவாக இருக்கும் என்று கனடிய சுற்றாடல் திணைக்களம் தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

காட்டுத்தீ புகையால் காற்றின் தரமும் புலப்படுத்தலும் குறுகிய தூரங்களில் மாறுபடலாம் மற்றும் நேரத்திற்கு நேரம் இது கணிசமாக மாறுபடலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை வடக்கு முதல் தெற்கு வரை காற்றின் தரம் மேம்படும் என்று கனடிய சுற்றாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறப்பு காற்று தர அறிக்கை நீக்கப்படும் வரை வெளியில் செலவிடும் நேரத்தைக் கட்டுப்படுத்துமாறு தேசிய வானிலை அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, சனிக்கிழமை முதல் நடைமுறையில் இருந்த வெப்ப எச்சரிக்கை நீக்கப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை மிகவும் குளிர்ச்சியாக இருக்கும், முக்கியமாக மேகமூட்டமாக இருக்கும், உயர்ந்த வெப்ப நிலை 23 பாகை செல்சியஸ் மற்றும் 30 சதவீத மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

**அமெரிக்கா மீதான..**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இப்போது தளர வேண்டிய நேரமல்ல. நம்முடைய நிலைப்பாட்டை உறுதியாக வைப்போம் என அவர் தெரிவித்துள்ளார்.

இப்போதுள்ள போல் உருக்கு, அலுமினியம், வாகனங்கள், மரத்தொழில் மற்றும் தற்போது சுண்ணாம்பு உள்ளிட்டவைகளில் ஏற்கனவே அமுலிலிருக்கும் வரிகளுடன் சேர்த்து 35 வீத வரி அதிகரிப்பு மிகவும் கவலையளிக்கிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க உருக்கு மற்றும் அலுமினியத்துக்கு 50 வீத வரி விதிக்க வேண்டும் என முதல்வர் போர்ட் , பிரதமர் கர்னியிடம் கோரியுள்ளார்.

கனடாவிடம் அமெரிக்காவிற்கு தேவையான அனைத்தும் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

எண்ணெய், எரிவாயு, முக்கிய கனிமங்கள், உருக்கு, அலுமினியம், மின்சக்தி, பட்டாசு மற்றும் யூரேனியம். நாங்கள் அமெரிக்காவின் முதன்மை வாடிக்கையாளர்கள், மேலும் பல மில்லியன் அமெரிக்கர்களுக்கு வேலை வழங்குகிறோம். எனவே, ட்ரம்பின் வரி ஆபத்துக்கு எதிராக கனடா தனது உள்நாட்டுச் சக்திகளை முழுமையாக பயன்படுத்த வேண்டும் என போர்ட் தெரிவித்துள்ளார்.



# டொரொன்டோவில் வைரஸ் தொற்று

கனடாவின் டொரொன்டோவில் வைரஸ் தொற்று தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

டொரொன்டோவில் முதல் மேனித மேற்கத்திய நைல் வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய தினம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் தொற்று ஒரு முதிய வரிடம் கண்டறியப்பட்டதாக டொரொன்டோ பொது சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.


மேற்கத்திய நைல் வைரஸ், தொற்றடைந்த நுளம்பு கடிக்கு பிறகு மனிதர்களுக்கு பரவுகிறது.

இந்த வைரஸின் அறிகுறிகள் ஒருவர் நுளம்பினால் கடிக்கப்பட்ட 2 முதல் 14 நாட்களுக்கு இடையில் தோன்றக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காய்ச்சல், தலைவலி, மயக்கம், வாந்தி, போன்ற நோய் அறிகுறிகள் தென்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் வெளியில் செல்லும்போது நுளம்புகடிகளை தவிர்க்க வெள்ளை நிற நீள கையுடைய சட்டை மற்றும் நீள கால்சட்டைகள் அணியுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# கியூபெக் மாகாணத்தில் மக்கள் தொகை வீழ்ச்சி




கனடாவின் கியூபெக் மாகாணத்தின் மக்கள்தொகை குறையும் என மதிப்பிட்டுள்ளது.

2030ஆம் ஆண்டளவில் மாகாணத்தின் சனத் தொகை 80,000 ஆல் குறையும் என புள்ளி விபரவியல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்காலிக குடியேறிகளின் எண்ணிக்கையைக் குறைக்க அண்மையில் அரசு கொண்டுவந்த கொள்கைகள் உள்ளிட்ட பல காரணிகளால் மக்கள் தொகை குறையும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிறப்பு விகிதங்கள் மற்றும் சர்வதேச குடியேற்றப் போக்குகளை அடிப்படையாகக் கொண்டு இந்த மதிப்பீடுகள் உருவாக்கப்பட்டதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

2024ஆம் ஆண்டில் கியூபெக் மாகாணத்தின் மக்கள்தொகை சுமார் 9.1 மில்லியனாக இருந்ததாக அந்த நிறுவனம் கணக்கிட்டுள்ளது.

எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை 9.2 மில்லியனாக காணப்படும் எனவும் இது கணித்துள்ளது.

2021 முதல் 2051 வரையிலான காலகட்டத்தில் கியூபெக் நகரப் பகுதியின் மக்கள்தொகை அதிக அளவில் வளர்ச்சியடையும் எனவும், அதே கால கட்டத்தில் மொன்ட்ரியல் பகுதியின் மக்கள்தொகை குறையும் எனவும் நிறுவனம் கூறியுள்ளது.

கியூபெக் நகரப் பகுதியின் மக்கள் தொகை 21 சதவீதம் வளர்ச்சியடையும் எனவும், மொன்ட்ரியல் பகுதியின் மக்கள் தொகை 4.5 சதவீதம் குறையும் எனவும் ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிட்டுள்ளனர்.